**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 37 ஆவது அமர்வின் இலங்கைத் தூதுக்குழுவில் அமைச்சர்களான திலக் மாரப்பன, சரத் அமுனுகம மற்றும் ஃபைசர் முஸ்தபா உள்ளடக்கப்பட்டுள்ளனர்.**

2017 மார்ச் 23 ஆம் திகதியிடப்பட்ட 34/1 ஆம் இலக்க தீர்மானத்தின் படி மனித உரிமைகள் பேரவையின் கோரிக்கைக்கமைய, மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் 2015 ஒக்டோபர் 1 ஆம் திகதியிடப்பட்ட 30/1 ஆம் இலக்க தீர்மானத்தை நிறைவேற்றுவது மற்றும் இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் குறித்த விடயங்கள் தொடர்பிலான எழுத்து மூலமான அறிக்கையொன்றினை 2018 மார்ச் 21 ஆந் திகதி பேரவையிடம் சமர்ப்பிக்கவுள்ளார்.

மார்ச் 21 ஆந் திகதி நடைபெறவுள்ள பேரவையின் 37 ஆவது அமர்வில் இலங்கை தூதுக்குழுவானது வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பன, ச.ச, தலைமையிலான விசேட பணிகளுக்கான அமைச்சர் சரத் அமுனுகம மற்றும் மாநகர சபைகள் மற்றும் உள்நாட்டு அரசாங்க அமைச்சர் ஃபைசர் முஸ்தபா ஆகியோரை உள்ளடக்குகின்றது.

மேலும் இந்த தூதுக்குழுவில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம், ஒருங்கிணைக்கப்பட்ட நல்லிணக்கப் பொறிமுறைக்கான செயலகம் மற்றும் ஜெனிவாலிலுள்ள ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் நிரந்தர தூதரகம் ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகளும் உள்ளடக்கப்படவுள்ளனர்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சு
கொழும்பு
2018 மார்ச் 19